The Village Panchayat Journal.

VOL. IV] MAY, 1941. [No. 2.

The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.

Panchayats and Village Industries.

If you desire brother man to co-operate with you in any manner whatsoever, it is necessary that his stomach is not crying for food. A hungry man with starvation stalking before him cannot be expected to do anything socially good or useful. In India, to-day, it is unfortunately true that large numbers of our villagers have not sufficient food to eat. Therefore it is, that in all the Rural-reconstruction work undertaken by different agencies village industries that may add even a few copper coins to the income of the poor villager are given a very prominent place. Very earnest attempts have been made for a long time, almost for nearly thirty years by the missionaries, the Servants of India Society, the Co-operative movement, the Congress, the States here and there and by other bodies, in this matter.

After the Congress took up, under Gandhiji's leadership, the programme of Khaddar, it has grown to the symbol of all village Industries. The All India Village Industries Association has worked for five years now on behalf of these Industries. As per its latest annual report, it is clear it has taken part in varied activities. It is publishing very useful literature in English as well as the Indian Provincial Languages, conducting Magan Sangrahalaya, a central Museum for products and processes of Village Industries, and carrying on Grama Sevaka Vidyalaya for training village workers. It has encouraged and carried on research work on such industries as paddy-making, bee-keeping, fish culture, paper-making, Coirspinning and weaving, Vegetable oil lamps and the like. It has been surveying cottage industries, holding exhibitions, doing surveying and planning for the improvement of village industries. It has been starting, managing, affiliating, and helping the various types of cottage industries institutions in different parts of the country.

When Congress Ministries came into power this association had very good encouragement and the actual achievement in Madras was the establishment of Museums in many places and the very material help that was given to the Khaddar and weaving industries. We are glad to note that the Advisers continue the work so begun.

But with all the useful work that this association has been doing and all the other agencies have done, the movement on behalf of Village Industries has not had the widespread extension it should have achieved.

The All-India Village Industries Association in its report tries to find reasons for the slowness of progress. They give about five of them. We are told that public opinion amongst the educated is either apathetic or definitely against the movement. No organised effort or scientific knowledge has been directed to the industries; workers of the required type have been lacking. The chief problem for the village artisan is in regard to Capital and markets. Lastly many of the obstacles in the way of the village producers—Such as taxes, excise, currency, exchange, railway-rates, forest laws, etc.,—are beyond the range of private effort and require Governmental control.

The educated man who is said to be apathetic or against the establishment of Village Industries really includes the Village Panchayatdar and all his bosses right upto the Government. Clause 1-A (2) J of Schedule five of the Local Boards Act contemplates that the Panchayat may foster and encourage cottage industries, subject to rules framed by the Government in this behalf. The Government do not appear to have framed any effective rules nor have any panchayats directed their attention to this sub-clause. The whole economic outlook has all along been one of supplying the village with its needs from outside for the ostensible reason that the villager cannot find the Capital. True it is he has no Capital. Equally true it is that he has no scientific knowledge certainly he is not responsible for these. But the abundant capacity in him to give the labour to the task set to him has immediately to be realised as an asset that must be utilised and utilised forthwith to feed as many hungry mouths as possible. It is no consolation to the villager to tell him that better days are coming, that he shall wait till scientific research has achieved results and that capital is still shy or cannot find return in Village Industries. Unemployment amongst the rural population has assumed dimensions not easily realised by the men at the top rungs in administration or leadership and it grows worse day after day. It is time that all men—old and young—and to that extent he expects his more educated brother to give him the work that he can do and take the fruit of that work for daily use and in return, provide him with the wherewithal to live. The All-India Village Industries Association, a centralised body at the top, can but

show the way. It cannot ta[illegible]e of local effort which is the life-breath of cottage industries. Until the Panchayats in the villages and the local co-operative societies move and move in unison, all this great talk of revivifying rural life from whomsoever it may come—must remain a mere outward tom tom The prohibition programme in this province appeared to possess some promise of starting some village industries on to their feet. In certain localities we did hear of village associations being formed to help establishment of Village Industries. But we feel convinced that no organised mass attempt for resuscitation of rural industries and life is possible until some definite plan of action is evolved through the Village Panchayats and the local co-operative societies. We have no hesitation, therefore, in calling upon all the Panchayats to make a demand by resolution and otherwise that the Government do undertake putting Clause 1-A (2) J of Schedule V of the Local Boards Act into execution in as universal and need for development of Cottage Industries is a necessity in every village. The Madras Provincial Budget makes a provision over 20 lakhs, for the Industries Department. We may not say that this amount is ill-spent but until the Department of Industries looks much more closely into the great rural unemployment problem and undeterred by slogans so pecularily brandished in the face of rural development schemes by advocates of the machine age goes forward to help the village workman and labourer to make a more decent living by organising and developing cottage industries through collaboration with the Panchayats and Co-operative Societies it would have .existed to no efficient purpose. Help the villager to husk his paddy, to grind his flour, to press his oil, to prepare his gur or sugar, to keep his bees and produce his honey, to make his pottery, soap, tiles, and bricks, ropes, brass and metal wares, tools and implements, and if possible paper, and his glassware, and bangles, to gin, card, spin and weave his cotton, to breed his sheep, and make his woollen wear, to tan his hides, to raise poultry and gather eggs, to weave his mats, and to grow his fruits, vegetables, and fish, to manufacture his own dairy produce, to take and render the local carpentary, smithy and leather services. Do all this by all means in the best scientific spirit possible under the circumstances, but do it with the one single purpose—the purpose of finding the villager the sustenance that he so badly needs for the day. No longer may you count on his philosophic contentment; for, we have all consciously moved him out of it and are so doing every minute in the name of progress yet unachieved.

Amendment to the Public Health Act.

The Government of Madras propose to amend the Public Health Act. They have published a Bill for that purpose. We do not desire to discuss it in any detail. The Panchayat was badly overlooked in

the original Act. This amendment, by one of its clauses, makes the position worse. We are told that because individual panchayats are too small to deal with situations arising when epidemics break out proper authority should be vested in the District Boards. The cost however, in part has to be borne by the Panchayat Boards. We have persistently demanded recognition of joint committees of Panchayats exactly to deal with situations similar to the one contemplated by the Government in this amendment. Instead of doing that and arming Panchayats with power to join together and carry out programmes common to a number of them, with full local knowledge and influence, the Government goes back to the District Board situated at a distance and incompetent to cater to the interests of the villager bidding good-bye to decentralisation and development from the foundations. We hope the Government will revise their policy and make the panchayat the axis on which local administration shall revolve. Joint Committees of Panchayats alone seem to be the solution for a more efficient life of the rural population. The District Board has long proved obsolete.

We publish at page the speech of Mr. Grub Inspector of Local Boards on the occasion of the first Regional Conference of Municipal Commissioners at Coimbatore.

We are glad to note that the Inspector has put before the Commissioner service to the Municipality as their first and foremost duty. Every word he spoke equally applies to the Panchayat Officers who are being trained for being appointed as Executive Officers to Panchayats and to the District Panchayats Offices and to Assistant Panchayat Offices. We trust the Executive Officers of Panchayats as also the District Panchayat Officers and Assistant Panchayat Officers will bear in mind these words of wisdom and try to live up to the ideal expressed in those words.

கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 4	மே, 1941.	No. 2.

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டியார் ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப்பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் புலப்படுகிற விதமாகக் காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற்செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பியிருந்தால் தவிரக் கையெழுத்துப் பிரதிகள் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுமோ அதற்கு முன்மாதத்திலே 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

தலையங்கம்.

பஞ்சாயத்துகளின், கிருமங்களின் கைத்தொழில்கள்.

உங்களுடன் எவ்விஷயத்திற்காகவாவது ஒருவன் கூட்டுறவு செய்ய வேண்டுமானால் அவனுக்கு பசியிருக்கக் கூடாது. பசியின் கொடுமையால் பீடிக்கப்பட்ட ஒருவன் உலகிற்கு உபயோகம் செய்ய முடியாது. இந்தியாவில் துர் அதிர்ஷ்ட வசமாக, வெகு ஜனங்களுக்கு உண்ண உணவுகூட இல்லை. ஆகையினால் கிரும விவசாயனத்தில் கிருமகைத்தொழில் முக்கியமாக இருக்கின்றது. இவ்விஷயமாக, சென்ற முப்பது வருஷகாலமாக ஸர்வன்ட்ஸ் ஆப் இந்தியா ஸொஸைடி, கோவாபரேடிவ் மூவ்மென்ட், காங்கிரஸ், ஸ்டேட்ஸ், இன்னும் சில ஸங்கங்களில் பெரும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

காந்திஜியினால் காங்கிரஸ் தலைமை வகித்த பிறகு, கிரும கைத்தொழிலில் முக்ய அம்ஸமாக செய்யப்பட்டது கதர். இக்கைத்தொழில்களுக்காகவே அகில இந்திய கிரும கைத்தொழில் ஸங்கம் சென்ற ஐந்து வருஷ காலமாக உழைக்கின்றது. அதன் வருஷாந்திர அறிக்கைகளிலிருந்து அது மற்ற சமாசாரங்களிலும் சிரமமெடுத்துக்கொள்கிறது என்று தெரிய வருகிறது. அது ஆங்கிலத்திலும், மற்ற இந்திய பாஷைகளிலும் உபயோகமுள்ள பிரசாரங்களை பிரசுரிக்கின்றது. மகன் ஸங்கிர ஹாலயா என்ற வினோத சாலையில் கைத்தொழிலினால் செய்யப்பட்ட பொருள்களை வைப்பதும் கிருமவேலையாட்களை பயிற்சிக்க கிரும ஸேவகா என்னும் வித்யாலயாவையும் நடத்திவருகின்றனர், நெல் பயிரிடுதல், தேன் கூட்டுதல், மீன்

பிடித்தல், காகிதம் செய்தல், கயர்பின்னுதல், நெசவு, மற்ற கைத்தொழில்களில் ஊக்கத்தை யுண்டுபண்ணி நடத்துகிறார்கள். நமது தேசத்திலுள்ள சங்கங்களை, சேர்த்தும், வேருபடித்தும், மேல்பார்வையிட்டும் வருகின்றது.

நமது மாகாணத்தை காங்கிரஸ் மந்திரிகள் ஆளுகையில், ஷை சங்கத்திற் உதவிபுரிந்து, வினோதசாலைகளைத் திறந்தும், முக்கியமாக, நெசவுத் தொழிலிற்கும், கதர் தொழிலிற்கும், பெரும் உதவி புறிந்தார்கள். இப்பொழுது நடக்கும் அட்வைஸர்களும், ஆரம்பமான வேலையை சரிவர செய்வது நமக்கு மிகவும் சந்தோஷம்.

ஆனால், இச்சங்கமும், மற்றவைகளும், இது வரையிலும் செய்துள்ள வேலைகளினாலும், கிராம கைத்தொழில் அடைய வேண்டிய க்யாதியை இன்னும் அடைய வில்லை.

அகில இந்திய கிராம கைத்தொழில் ஸங்கம், இக்காரணத்தை கண்டுபிடிக்க முயல்கிறது. அக்காரணங்களில் ஐந்தை அவர்கள் கூறுகிறார்கள். பொது ஜனங்களின் அபிப்ராயம், இரக்க மில்லாத தாகவாவது, அல்லது விரோதமாகவாவது இருக்க வேண்டும் ஒழுங்கான முயற்சி கைத்தொழில்களின் மீது எடுக்கப்பட வில்லை. சரியான வேலையாட்கள் கிடைப்பதில்லை. முதல் பணமும், வியாபாரமும்தான் சிறப்பத்திற்கு காரணம். கடைசியாக, வரி, பணம் மாற்றுதல், ரயில் விதி, காடுகளின் விதி, இவைகள் வழிமரைப்பதால் அரசாங்க மேற்பார்வை வேண்டும்.

இரக்க மில்லாதவர்களும், கிராம கைத்தொழிலுக்கு விரோதமாக இருப்பவர்களுமான ஜனங்களில், பஞ்சாயத்தார்களும், அரசாங்க உத்யோகஸ்தர்களும் சேர்ந்தவர்களே. கிளாஸ் 1-எ (2) ஜே ஷை Vல், லோகல் போர்டு நடவடிக்கைகளில் ஐந்து, அரசாங்க உத்திரவின்யுட்ன்படிக்கையாக பஞ்சாயத்துகள் கைத்தொழில்களில் சிரத்தை எடுக்கலாமென்று சொல்லுகிறது. இவ்விஷயமாக அரசாங்கம் கடினமான விதியை ஏற்படுத்தவுமில்லை, பஞ்சாயத்துகளும் சிறத்தை எடுத்துக்கொள்ள வில்லை. கிராமங்களுக்கு வேண்டிய பொருள்களை வெளியிலிருந்து கொண்டு வருவதே முக்கியமாக தோன்றிற்று. ஆனால் இதற்கு கிராமவாசியிடம் முதல் பணமில்லை. அவனுக்கு நல்லறிவு இல்லாததினால் அவன் இவைகளுக்கு ஜவாப்தாரி யில்லை. அவனிடமிருந்து கிடைப்பது தேகஉழைப்பு. அதை சரிவர கிரகித்து அதனால் அநேக பசியுடன் வசிக்கும் வயறுகளை, காப்பாற்றலாம். நல்ல நாள் இனிவரும். விஞ்சானம் முன்னடையும் என்று அவர்களிடம் சொல்லி ஏமாற்றுவது நலமன்று. வேலையில்லாமை, விவசாயிகளிடம் குடிகொண்டிருக்கிற தென்றும், தினம் அதிகமாகின்றதென்றும, அதிகாரிகள் அறிகிறதில்லை. வாலிபர்கள் கிழவர்களுக்கு, படித்த சகோதரர்கள் வேலைகொடுத்து. அதற்கு பதிலாக அவர்களுக்கு உண்ண உணவு கொடுக்கவேண்டும். மிகவும் கியாதிவாய்ந்த அகில இந்திய கிராம கைத்தொழில் சங்கம் வழியை மட்டுமே காட்டக்கூடும். அது மற்ற வேலையை செய்ய முடியாது. பஞ்சாயத்துகளும், கோவாபரேடிவ் ஸொஸைடிகளும் ஒன்று சேர்ந்து இதை முன் கொணராவிடில், கிராம கைத்தொழில் செய்வது, வீண் ஜம்பமே. இம் மாகாணத்தில் எண்ணிறந்தும்

(Prohibition) வந்ததும், கிராம கைத்தொழில் முன்வரும் வழியை காட்டியது. சில இடங்களில் கிராம கைத்தொழிலை முன் கொணர சில சங்கங்கள் இருந்திருப்பதாக நாம் கேட்டோம். ஆனால் எதுவும் நாட்டுகமான கைத்தொழிலில் சிறத்தை எடுக்கவில்லை. கிராம பஞ்சாயத்துகளும், கோ-வாபரேடிவ் ஸொஸைடிகளும் இவ்விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் ஆகையினால் நாம் 1-எ (2)-ஜே. ஷெ. Vல் பிரகாரம் அரசாங்கத்தை ஒவ்வொரு கிராமங்களிலும், நாட்டுகமான கைத்தொழில் வேண்டும் என்று கேட்பது அவசியமில்லை, மதராஸ் மாகாண பட்ஜட் ரூ. 20 லக்ஷத்தை கைத்தொழிலுக்காக தருகிறது. ஆனால் இப்பணம் வேரு விதமாக செலவு படுகிற தென்று சொல்லப்பட வேண்டாம். ஆனால் டிபார்ட் மென்ட் ஆப் இண்டஸ்டிரீஸ், கிராம தொழிலாளிகளின் வேலையில்லாக் கஷ்டத்தை கவனித்து, நாட்டுகத்தொழிலை சரிவர நடத்த வேண்டும். கிராமவாசிகளுக்கு, நெல் பயிரிடுவதற்கும், மாவரைப்பதற்கும், எண்ணை எடுப்பதற்கும், தேன் எடுப்பதற்கும், கல்கள், ஓடுகள், ஸோப்புகள் செய்வதற்கும் பாணை செய்வதற்கும், கயிர் திரிப்பதற்கும், பித்தளை செம்பு ஆகிய உலோக சாமான்கள் செய்வதற்கும், உளி முதலிய சாமான்கள் செய்வதற்கும், காகிதம், கண்ணாடி சாமான்கள், வலையல்கள், நூல் நூற்று, நெசவுதல், ஆடு மேய்தல், தோல் பதனிடுதல், பக்ஷிகளை வளர்தல், முட்டைகள் எடுத்தல், பாய் செய்தல், பழம், கரிகாய்கள் மீன் இவைகளை வளர்த்தல், தச்ச வேலை, கருமான் வேலை, தோல்வேலை. இவைகளை கிராமவாசிகளுக்கு கற்று கொடுத்து வரவேண்டும். ஷை கூறியவைகளை உற்சாகத்துடன் கிராம வாசிகளுடன் செய்து அவர்களுக்கு தினம் உண்ண உணவு கொடுங்கள். அவன் திருப்தியடைந்தானோ என்று சந்தேகிக்க வேண்டாம். ஏனென்றால் நாம் மனப்பூர்வமாய் இவைகளை செய்வது அவனை பசிப்பிணியிலிருந்து காப்பாற்றியுள்ளோம்.

பொது ஜன சுகாதார நடவடிக்கையின் சீர்திருத்தம்.

மதராஸ் மாகாண கவர்ன்மென்டு சுகாதார நடவடிக்கையை சீர்திருத்த நினைத்திருக்கிறது. அதற்காக ஒரு பில்லும் பிரசுரித்தார்கள். அதை பற்றி கூர்மையான அறிவு அனாவசியம். பழய நடவடிக்கையின்படி பஞ்சாயத்துகள் சரியாக மேல் பார்வையிலில்லை. ஒரு விதத்தில், இச் சீர்திருத்தம் அதை கேவலமாக்குகிறது. மாரகநோய்களைத்தடுக்க தனிப் பஞ்சாயத்துகள் சக்தியற்றதாகாக, ஜில்லா போர்டு அதிகாரிகள் அதைக் கையாள வேண்டுமென்றும் நமக்கு சொல்லப்பட்டது. பாக சிலவுகளை பஞ்சாயத்துகள் அங்கிகரிக்கவேண்டும். கவர்ன்மெனடு ஆராய்சி செய்த சமாசாரங்களைப் போலுள்ளவைகளை பார்க பஞ்சாயத்து கூட்டுக் கமிட்டினிய அனுமதிக்கும்படி நாம் பிடிவாதமாய்க் கேட்டோம் ஷை கூறியபடி செய்து, பஞ்சாயத்துகள் ஒன்று கூடி பொதுவான சமாசாரங்களை கவனிக்கச் செய்வதை விட்டுவிட்டு, அரசாங்கம் தூரத்திலிருக்கும், கிராமவாசிகளின் பிரயாசையை சேர்க்கக்கூடிய சக்தி அற்றவைகளான ஜில்லா போர்டை நோக்குகிறது. அரசாங்கம் தன் எண்ணத்தை மாற்றி, லோகல் பரிசீலனத்தை பஞ்சாயத்துகளின் வசமாக்குமென்று எண்ணுகிறோம். ஜனங்களின் சுகாதாரத்திற்கு பஞ்சாயத்து கூட்டுக்கமிட்டி தான் நல்லதென்று தோன்றுகிறது. ஜில்லா போர்டு உபயோகமற்றது என்று முன்பே நிரூபிக்கப்பட்டது.

பிரித்ர மூலிகை மூலம்யமாய் கிரிமிகளைக் கொல்லுதல்.

சாமந்திபோல் பிரித்ரம் என்னும் மூலிகை பிரசித்தி யடைந்திருக்கிறது. இது கரும் ஈக்களை கொல்வதற்கு மிகவும் நல்லது. ஆகையினால் இந்த பாரத பூமி யில் எவ்வளவு தூரம் இது கிடைக்கும் என்று பரீக்ஷிக்கப்படுகிறது.

சாமந்தி முதலில் கிடைத்த யிடம் தாத்மிஷ்யா என்னும் பிரதேசத்தின் அனுகானம்.

வெகுநாளாக இது ஜப்பானிலிருந்து மற்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டது. ஜப்பானின் வடக்கு பாகத்திலுள்ள ஹொக்கேடோ என்னும் ஊரில் அதிகமாக வளர்க்கப்பட்டது. இதற்கு பிறகு மற்ற தேசங்களிலும் இதை வளர்க்க ஆரம்பித்தார்கள். ஆப்பிரிக்கா தேசத்திலுள்ள கென்யா என்னும் நகரத்தில் இது மிகவும் நன்றாய் வளர்க்கப்பட்டது என்று தெரியவருகிறது.

இந்தியாவில் 6 வருஷ முன்பு.

1934-36-ல் மலேரியா ஸர்வே டைரக்டர், இங்கிலாந்திலுள்ள ஸட்டன் என்னும் கம்பெனியிடமிருந்து விதைகளை வாங்கி கஸௌலி கர்னல் என்னும் ஊர்களில் நட்டார்கள். ஆனாலும் உபயோகப்படவில்லை. 1933-ல் பஞ்சாப் அரசாங்கம், அமெரிக்காவிலிருந்து விதைகளை வாங்கி லைல்பூர், முறி என்னுமிடங் களில் நட்டார்கள். காஷ்மீரத்தில், சமுத்திர மட்டத்திற்கு 5000 அடி உயரத்தில் பாராமுல்லா என்னுமிடத்தில் பயிரிட்டு வருகின்றனர்.

1937 ஜனவரியீல் மத்திய விவசாய பரிசோதனை சங்கத்தார் இதைக்குறித்து அதிக பிரயத்தின படவேண்டுமென்று நினைத்தார்கள். இந்தியன் ஆபீஸ் வழியாக இங்கிலாந்திலிருந்து கொஞ்சம் விதைகளை வரவழித்து இந்தியாவிலுள்ள சில சமஸ்தானங்களிலும், மற்றும் சில இடங்களிலும் இதை பயிரிட்டார்கள். 1940 ஜனவரியீ கடைசியில் யுகோஸ்லோவியாவிலிருக்கும் டால்மீஷியா நகரத்தி லிருந்து கொணரப்பட்ட விதைகளை டை மாதிரியே செய்தார்கள். இவ்விஷய மாக சில முக்யஸ்தர்கள் உதவி புரிந்தனர். கீழ்கண்ட ஊர்களில் பயிரிடப்பட்ட வைகள் உபயோகமற்றதாய் விட்டன. பம்பாய் மாகாணத்திலுள்ள, தார்வாடா, பூனா என்னும் நகரங்களிலும், மத்திய மாகாணத்திலுள்ள, நகரன்பூர், டோராடோம், சௌபட்டியாவிலும், ஸிந்துவில் ஸக்ரந்துவிலும், மைசூர் ஸமஸ்தானத்தில் பன்ன ஹென்னூரிலும், பீஹாரில் ராஞ்சியுலும். முறி (6000 அடி), குலு (5000 அடி), பாலம்பூர் (4000 அடி), பஞ்சாபிலும், காஷ்மீரிலும், நீலகிரியில் சில இடங்களி லும், வடமேற்கு மாகாணத்தில் சில இடங்களிலும், விதைக்கப்பட்டவைகள் நல மடையும் ஸ்திதியில் இருக்கின்றன. இம்மாகாணங்களின் அனுபவத்திலிருந்து, உஷ்ணமாகவும், ஜலம் நிற்காமலுமுள்ள இடங்களில் நன்றாய் வளரும் என்று தெரியவருகிறது. காற்றிற்கும், மழைக்கும் செடிகள் நிற்கமாட்டா. மத்திய சீதோஷ்ண ஸ்திதியுடனிருக்கும் தென் ஹிமாலய பிரதேசம் சரியான இடமென்று தெரியவருகிறது.

எப்படி பண்டை செய்வது ?

விதை விதைத்து வளர்க்க வேண்டும். முதலில் அவைகளை நெருங்கே வளர்த்து, பிறகு நாற்றிட வேண்டும். விதைப்பது மார்ச்சு, ஏப்ரல் மீ நடக்கும். 10 அல்லது 15 நாட்களில் முளை வரும். 3 அங்குல உயரமாக வளர்ந்ததும், நாற்றிட வேண்டும். இவைகளின் கிளைகளை நட்டும் வளர்க்கலாம். தடிமனாக உள்ள செடிகளிலிருந்து கிளைகளை வெட்டி வளர்க்கலாம். பூமியை நன்றாக உழுது, எரு விட்டு, மூன்று முழங்களுக்கு இடையே நாற்று நட்டு ஜலம் கட்டவேண்டும். புல் பூண்டுகள் இருக்கலாகாது. வேண்டிய சமயங்களில் ஜலம் கட்டவேண்டும். மழை காலத்தில் நாம் ஜலம் கட்டுவது அனாவசியம். அதிகமான ஜலத்தை வெளியாக்கி விடவேண்டும். பஞ்சாபில், நாற்றிட்ட பிறகு ஒரு வருஷத்தில் பரித்திரம் பூவாகின்றது. மார்ச்சு மாதத்திலிருந்து மேமீ வரையிலும் புஷ்பிக்கும். புஷ்பம் நன்றாக புஷ்பித்ததும் அதை எடுத்து உணர்த்திவிட வேண்டும். அப்புஷ்பங்களை விற்க வேண்டும். பஞ்சாபில் ஏக்ராவுக்கு சாரசரி எவ்வளவு புஷ்பங்கள் கிடைக்கின்றனவென்று கணக்கிடவில்லை. ஆனாலும் ஏறக்குறைய ஏக்ராவுக்கு 400 புஷ்பங்கள் கிடைக்கின்றது என்று சொல்லக்கூடும். மேற்கூறியவழி பஞ்சாப்பிற்கே பொருத்தமானது. மற்ற மாகாணங்களில் வேறு விதமாக பண்டை செய்யக்கூடும்.

எரு.

அதிகமாக எருவுள்ள ஊரில் வளராது என்று, கென்யாவிலுள்ள பெரிய விவசாய விஞ்ஞனி, வி. ஏ. பெக்லியின் அபிப்ராயம். ஆகையால் ஜாக்ரதையாய் எரு விடவேண்டும். இதில் இவைகளில் கிருமிகளைக் கொல்லும் குணம் மந்தமாக இல்லாவிட்டால் எருவிட வேண்டும். மந்தமாயிருந்தால் எரு விடக்கூடாது.

குணம் (சத்து) எவ்வளவு ?

கென்யவில் பண்டை செய்யப்பட்ட பிரித்ரத்தில் 1.36% சத்துள்ளவை. வடமேற்கு மாகாணத்தில் பண்டை செய்யும் பரித்திரம் மிகவும் உத்தமம். அதில் 0.61%ல் இருந்து 1.11% சத்துள்ளவை. நீலகிரியிலுள்ள மொரால்ட்வ்யாலி, வின்ஸ்பார்க், கோட்டைகிரியில் தயாரானவைகளை கொணர்ந்து, கோயம்புத்தூரில் கிருமி சாஸ்திர பண்டிதர் பரீக்ஷித்ததில் இரண்டு விதமான கம்பளிப் புழு இருப்பதை கண்டார். இவைகளில் கோட்டைகிரியில் தயாரானவைகளில் அதிக புழு இருந்தன. ஆனால் இதில் ஒரு ரகஸ்ய மிருக்கின்றது. கோட்டைகிரியிலிருந்து வந்த உடனேயே உபயோகிக்கப்பட்டது. மற்றவைகளை இரண்டு மாதம் சென்று உபயோகித்தால் சக்தி ஒன்றுமில்லை.

இதுவரையிலும் கிடைத்திருக்கும் சமாசாரங்களிலிருந்து நமது தேசத்தில் பிரித்திரம் பண்டை செய்யக்கூடுமென்று தெரியவருகிறது. ஆனால், சத்து குறையாமலும், ராஸாயன விஷயங்களில் பூர்ண சாந்தியை கொடுக்கக்கூடியதாகவும் பண்டை செய்து விற்க செய்வது நமது கடமை, விதைகள் நல்லதென்று பார்ப்பது முக்யமே.

செய்தித் திரட்டு.

சிந்து ராஜாங்கத்தார்கள் கையால் செய்யும் காகித தொழிலை ஜனங்களுக்கு பிரசாரம் செய்ய வேலையாட்களை தன் தேசத்தில் பிரசாரிக்க நியமித்தார்கள் இவ்விஷயமாக கைத்தொழில்களை கண்டு கொள்ள இருவர்களை வார்தாவுக்கு அனுப்பித்தார்கள்.

* * *

திருப்பூரில் 300 பேல் C. O. 2 கம்போடியா பஞ்ஜை, 30,000 ரூ. விலை பொரும் என்று மதித்து ஏப்ரல் கடைசி வாரம் "ஆகா மார்கை" (கவர்ன்மென் இது சுத்தமானது என்று இடும் முத்திரை) முத்திரையிட்டார்கள். H. நம்பர் நூலை எடுப்பதற்கு இப்பஞ்ஜை கோயம்புதூரார்கள் வாங்குவார்கள் என்று அரசாங்கத்தார்கள் என்றும் நம்புகிறார்கள்.

* * *

உடிப்பியைச்சார்ந்த எட் நீர் மடத்து சுவாமிகள் எட் நீரில் ஜாதீய முக்ய வித்தியா சாலையை 40,000 ரூ. பாங்கு கட்டி தென் கானரா ஜில்லா போர்டார்கள் ஆதிக்கத்தில் விட்டு விட்டார்கள். இதன் திறப்பு விழாவை, ஸ்ரீ. ஸ்ரீ. ரகுமான்ய தீர்தமவர்கள் என்னும் மற்றொரு சுவாமியார் நடத்திவைத்தார். நல்ல வழியில் நடப்பித்து, ஜாதியின் பெருமையை ஸ்தாபிக்கும் வித்தை முக்கியமென்று எட் நீர் சுவாமிகள்போல, மற்ற சுவாமிகளும், மடாதிபதிகளும், இப்படிப்ப வித்தியாலயங்களுக்கு உதவி புரிய வேண்டுமென்று கோரினார்கள், சுகமாக நடக்கவேண்டும்.

* * *

பஞ்சாயத்துகளின் அத்யாபிமானியான ஸ்ரீ டி. ஜி. ரூவர் போர்டவர்கள், லோகல் போர்டுகளின் பரிபாலனமும, மில் முதலாளிகளிற்கும் கூலிகளுக்கும் உண்டான சண்டையை தீர்க்கவும், சக்தியுடையவர்.

* * *

நம் தேசத்தில், ஐக்யமாகாணத்தில் கண்ணாடி தொழில் அபிவிருத்தி யடைகிறது. இதுவரையிலும், சிப்பி முத்துகளும், பசமணிகளும் வெளி யூருகளிலிருந்து இரக்குமதியாயின. இப்பொழுது ஐக்யமாகாணத்தில் தயாராகின்றன. ரேக்குகளும் கண்ணாடிகளும் தயாராகின்றன. ஐக்ய மாகாணம் கண்ணாடித் தொழிலை தனிமையாகவும் முக்யமாகவும் செய்ததின் பலனிதுவே.

உங்களுக்கு தெரியுமா?

இங்கிலாந்துக்கு அட்லாண்டிக் யுத்தம் எப்படி நடக்கின்றதோ?

ஆப்ரிக்கா வழியாய் அட்லான்டிக் வழியாய் சாப்பாடு கொணரும் கப்பல் களிலும், பிரயாணிகள் கொணரும் கப்பல்களில் பிரயாணம் செய்த ரிப்போர்டர் பத்திரிகைக்கு கீழ்வரும்படி எழுதினர்:—அவர் 4000 மைல் இக்கப்பல்களில் இருந்தாராம். பிரயாணம் ரொம்பவும் நன்றாக இருந்ததாம். நிஜமாக அவர்கள் பிரயாணம் செய்ய வேண்டியது 4000 மைலுக்கும் குறைவானதே. இருந்தும், அபாயங்களில் தப்பிக்க சுற்றாக செல்லவேண்டி யிருந்தது. கொஞ்ச மைல்களில் கப்பல் வரிசையாக இருந்தனவாம். பிரயாணி கப்பல்களேயும் மற்றதையும் காப் பாற்றுவதற்காக இக்கப்பல்கள் இருந்தனவாம். இருகப்பல்களுக்கும் உள்ள தூரத் திலாவது, வரிசையிலாவது கிரமம் தப்பாமல் சென்றன. எங்கேயாவது தூரமாக புகையைக் கண்டால், அது எந்த யுத்த கப்பலோ என்று சமாசாரத்தை கண்டு பிடிக்க அவைகளில் ஒன்று சென்று கண்டு வருமாம். ஆகியிலும், முழுவிலும், வெகுதூரம் வரைக்கும், சத்ருக்களின் கப்பல்களை தேடிச் செல்லும் விமானங்கள் தான் இவர்களுக்கு அகப்பட்டனவாம். 4000 மைல் பிரயாணத்திலும் ஒரு ஜெர் மன் விமானத்தையாவது இவர்கள் காணவில்லையாம். ஒருதரம் மாத்திரம் சத்து ருக்களின் மூழ்குக்கப்பல் (சம்மரைன்) வரும் ஜாடையைக் கண்டதும், ஜாக்கிரதை யாக இருந்தார்களாம்!

அட்லாண்டிக் சண்டையில் இம்மாதிரி சம்பவங்கள் எவ்வளவோ!

*　　　*　　　*

கோதாவரி அணைக்கட்டிற்கு எவ்வளவு செலவழிந்ததோ?

தவளேசுரம் அருகில் கட்டின கோதாவரி அணைக்கட்டு சுமார் 4 மைல் இருக் கின்றது. இதற்கு உபயோகித்த செங்கல்கள் லக்ஷக்கணக்கில் இருகின்றன. இதற்குப் பிடித்த கல்கள் 80 லக்ஷம் பாரு (அளவை) என்று கணக்கிட்டார்கள். 1852-ல் இது முடிவடைந்தது. அப்பொழுது மொத்த செலவு 12,17,000 ரூபாய். அப்பொழுதுள்ள பவுன்களை இப்பொழுதுள்ள ரூபாயாக மாற்றினதால், இம்மொத்தம் சேர்ந்தது. ஒரு பாரு செங்கலை வைக்க (சேர்க்) ரூ. 1-4-9 செல வழிந்தது. இவ்வளவு நயமாக இக்காரியம் அக்காலத்தில் நடந்தது என்று இக் காலத்தில் சொல்கின்றனர்.

*　　　*　　　*

மூங்கில்களுக்கு முட்டுகளேதற்கு?

எந்த மூங்கிலைப் பார்த்தாலும் முட்டுகளிருக்கின்றன. இது எதற்கு வந்தது என்று தெரியுமா? இக்காலத்தில் கண்ணாடி செய்ய ஆதாரமாகயுள்ள சிலிகா என்ற உலோகம் ஒன்றுள்ளது. படிகங்களிலுள்ளவை அதுவே. அந்த லோகத்தை மூங்கில்கள் பூமியிலிருந்து எடுத்து ஜீர்ணித்து, இந்த பளபளப்பையும், முட்டுகளை யும் அடைகின்றன. வயதான மூங்கில்களில் இச்சிலிகா உலோகம் ஓரிடத்தில் சேர்ந்து வெள்ளைக் கல்லாக மாறுகின்றதாம். அது கிடைப்பது மிகவும் அரிது.

*　　　*　　　*

நாமே பஞ்சு பண்ணை செய்வது ஜப்பானுக்கு கற்றுக்கொடுத்தோம்:—

1100 வருஷங்களுக்குமுன் இரு இந்தியர்கள் சமுத்திரத்தில் பிரயாணம் செய்து, கப்பலுடைந்து ஜப்பானைச் சேர்ந்தார்கள். இவர்களிடமிருந்த பொருள் களில் பருத்தி விதைகள் கொஞ்சமிருந்தன. அதை வைத்து முதலில் பருத்தி அபிவிருத்தி செய்தார்கள்.

பஞ்சாயத்து செய்திகள்.

ஏற்படுத்தப்பட்டன.

திருச்சிராப்பள்ளி ஜில்லா, உதயருபாலம் தாலுக்கா, உலக்குரிச்சி பஞ்சாயத்து, 8 மெம்பர்கள்; ராமநாதபுரம் ஜில்லா, முத்து கொளத்தூர் தாலுக்கா, போருநாலி பஞ்சாயத்து 12 மெம்பர்கள், 1 ஷெ, 1 இ.; கடப்பை ஜில்லா, ப்ரத்ரூ தாலுக்கா, பல்லவொலு பஞ்சாயத்து, 9 மெம்பர்கள், 1 ஷெ, 1 ம; ஜமலமடுகு தாலுக்கா, நிமளதினே—கொட்டாலபல்லி பஞ்சாயத்து மெம்பர்கள் 8, 1 ஷெ. 1 ம, ரயசோடி தாலுக்கா, சின்ன மண்டம் தாலுக்கா, 13 மெம்பர்கள், 1 ஷெ, 2 ம.

தர்சமய ரத்து.

திருச்சிராப்பள்ளி ஜில்லா, குலிடலே தாலுக்கா, குலிடலே பஞ்சாயத்து, மறுபடி திறக்கும் தினம் 1941 ஜூன் 18லிருந்து மறு 6 மாதம் வாய்தா கொடுக்கப்பட்டது. கோயம்பத்தூர் ஜில்லா, பள்ளடம் தாலுக்கா, பள்ளடம் பஞ்சாயத்து, 14-5-'41லிருந்தும்; திருச்சிராப்பள்ளி ஜில்லா, உதயருபாலம் தாலுக்கா ஜெயகொண்டன் பஞ்சாயத்து, 7-5-'41லிருந்தும், மறு 6 மாதத்திற்கு ரத்து செய்யப்பட்டது. தஞ்சாவூர் ஜில்லா, தஞ்சாவூர் தாலுக்கா, மணிமொலை பஞ்சாயத்து, உடனே ரத்து செய்யப்படும், ஜூன் 15உயிற்குள் மறுபடியும் நிர்மாணிக்கப்படும். கர்நூல் ஜில்லா, பத்திகொண்ட தாலுக்கா, குங்குநூரு பஞ்சாயத்து, (கிராமவாசிகள் வேண்டாமென்றார்கள்). சேலம் ஜில்லா தர்மபுரி தாலுக்கா, தடங்கம் பஞ்சாயத்து (வரவு இல்லாமையினால்). ஓசூர் தாலுக்கா, மாவேலிபட்டி பஞ்சாயத்து (ஏழ்மையினால்). ராமநாதபுரம் ஜில்லா, சாத்தூர் தாலுக்கா, தாயிடப்பட்டி பஞ்சாயத்து, (கக்ஷிகளின் கஷ்டம்). மதுரை ஜில்லா, நீலகொட்டை தாலுக்கா, முல்லிபாரம் பஞ்சாயத்து (கக்ஷிகளின் கஷ்டம்).

ரத்து.

கீழ்வரும் பஞ்சாயத்துகள் ரத்து செய்யப்பட்டது:—(1) சேலம் ஜில்லா, சேலம் தாலுக்கா, எல்லம்பள்ளி (6 மாதம் எலக்ஷன் நடக்கவில்லை). (2) தென் ஆற்காடு ஜில்லா, திண்டிவனம் தாலுக்கா, மரக்கணம் (மேற்கூறிய விஷயத்திற்காகவே). (3) மலபார் ஜில்லா, பொன்னானி தாலுக்கா, வாயிலத்தூர் (மேற்கூறிய விஷயத்திற்கே). (4) சேலம் ஜில்லா, ஓசூர் தாலுக்கா, கரிகிபல்லி பஞ்சாயத்து (இவைகளின் வரவு ரூ. 6 ஒரு வேலையும் செய்ய முடியாது). (5) மலபார் ஜில்லா, குரும்பரநாடு தாலுக்கா, கடபுரம் பஞ்சாயத்து, (6 மாதம் எலக்ஷன் நடக்கவில்லை). (6) திருநெல்வேலி ஜில்லா, சங்கரன் கோயில் தாலுக்கா, தென்மலை (மேற்கூறிய காரணத்திற்காக). (7) மலபார் ஜில்லா, பால்காட் தாலுக்கா, அனத்தூர் பஞ்சாயத்து, (மேற்கூறிய காரணத்திற்காக).

விஸ்தீரணம் அதிகமானது.

தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலம் தாலுக்கா, பேரளம் பஞ்சாயத்தில், பேரளம் ரிவின்யூ கிராமம் அவ்வளவும் சேர்ந்திருக்கிறது. விசாகப்பட்டிணம் ஜில்லா, சிருகாகுளம் தாலுக்கா, கொல்லவலசா பஞ்சாயத்தில், தோடவாட கிராமத்தை சேர்த்தார்கள். (மெம்பர்களின் நம்பர் 9லிருந்து 10 ஆகியது).

காரியதரிசிகளை எடுத்தல்.

வட ஆற்காடு ஜில்லா, திருவண்ணாமலை தாலுக்கா, கீழ்நாச்சிபட்டு, பஞ்சாயத்து காரியதரிசி, பஞ்சாயத்து சொத்துக்களையும், ஆதிக்கங்களையும், துர்விநியோகம் செய்ததாலும், தஞ்சாவூர் ஜில்லா, திருத்துறைபூண்டி தாலுக்கா, முத்துப்பேட்டை பஞ்சாயத்து காரியதரிசி, ஸ்ரீ ஜனூப், ஏ. எஸ். ஏன். ஷேக் மகம்மது மரக்கையர், பஞ்சாயத்வரை வசூல் செய்யாததாலும், பதவியிலிருந்து எடுக்கப்பட்டார்கள். மேற்கு கோதாவரி ஜில்லா, சிந்திதலபூடி தாலுக்கா, தர்மாஜி கூடம் காரியதரிசி, ஸ்ரீகாரபாடி சதாசிவ ராவ், கூட்டங்களை சரியாக நடத்தாததாலும், பாங்கியிலிருந்து எடுத்த பணத்தை கணக்கில் எழுதாத காரணங்களாலும், கிருஷ்ணா ஜில்லா, குடிவாடி தாலுக்கா, குண்டகோடூரு பஞ்சாயத்து காரியதரிசிகள், ஸ்ரீ சிவலிங்கா, ஸ்ரீ ராம ராவு அதிகமான மொத்தத்தை பாங்கியில் போடாததாலும், கூட்டங்களை சரியாக நடத்தாததாலும், பதவியிலிருந்து தள்ளப்பட்டார்கள். வட ஆற்காடு ஜில்லா, போளூர் தாலுக்கா, போளூர் பஞ்சாயத்து, ஸ்ரீ எம். டி. கோவிந்தராஜுலு செட்டியார், வசூலில்லாமையாலும், வேலைகளை கிரமமாய் செய்யாததாலும், ஜல வசதிகளை சரியாய் செய்யாததாலும், ஆபீஸ் மனுஷ்யர்களை வீட்டு வேலைக்காக வைத்துக்கொண்டதாலும், பதவியிலிருந்து தள்ளப்பட்டார்.

உபகாரியதரிசி தள்ளப்பட்டார்.

கோயிலகுண்டல பஞ்சாயத்து போர்டு, உபகாரியதரிசி, ஸ்ரீ கொவ்வல புச்சி ரெட்டி, காரியதரிசிக்காக 30-12-1940-ல் ஏற்படுத்தப்பட்ட கூட்டத்தை காரணமில்லாமல் வாய்தா செய்கதுமில்லாமல், அன்றைய கூட்டத்திற்கு வந்தவர்களைப் போலீஸ் மூல்யமாய் தடுத்து அதிகாரத்தை துர்விநியோகம் செய்ததாலும், அரசாங்கத்தார்கள் அவரை பதவியிலிருந்து தள்ளிவிட்டார்கள்.

எலக்ஷன் ரூல்களின் பாகம் 1-ன் அவையும்.

மலபார் ஜில்லா, வல்லுவநாடு தாலுக்கா, வண்ணிய குலம் பஞ்சாயத்து.

அரசாங்க உத்திரவுகள்.

கவர்னமெண்டார்கள் லோகல் போர்டார்களைச் சார்ந்த காரிய நிர்வாண நிபந்தனைகளை மாற்றினார்கள்.

ஜி. ஓ. நே. 987 எல். ஏ. 5-4-1941 ஐ.

இம்மாற்றவினால் ரூ. 500 அதிகமான எல்லா மதிப்புகளுக்கும் 3 வருஷ ஸர்வீஸ்யுள்ள காயமான லோகல் பண்ட் உப இஞ்சினியர்கள் சாங்ஷன் செய்யக் கூடும். ரூ. 500 அதிகமான ரோடிற்கு கல்போடுதல், சரிசெய்தல் ஆகிய வேலைக்கு ரூ. 500 அதிகமான ரூ. 10,000 குறைவான அசல் வேலைகளை இவைகளை ஜில்லா போர்டு இஞ்சினியாரும்; ரூ. 10,000 அதிகமாக லக்ஷத்திலுள்பட்ட டிரங்கு ரோடுகளுக்கு சமபந்தமான ரோடுகளுக்கு கல்போடுவதற்காவது, ரோடுவேலைக்காவது, ரஸ்தா மேற்பார்வையிடும் இஞ்ஜனியராவது டிரங்கு ரோடுகளுக்கு ரூ. 10,000 விருந்து லக்ஷத்திற்குள்பட்ட வேலைக்கு பப்லிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டு மேற்பார்வையிடும் இஞ்ஜினீயரும், 1 லக்ஷத்திற்கும், 5 லக்ஷத்திற்கும் நடுவிலுள்ள மற்ற அசல் வேலைகளை முக்கிய இஞ்ஜினீயரும். அதற்கு அதிகமானவைகளுக்கு முக்கிய இஞ்ஜினீயர் ஒப்பிட்ட பிறகு கவர்னமெண்டார்கள் சாங்ஷன் செய்யக்கூடும். படிப்பு, பசுசிகிச்சை, வைத்தியங்களுக்கு, சம்பந்தமான கட்டிடங்கள் விஷயமாக, இது வரையுலுமுள்ள பிரத்தியேக நிபந்தனைகள் அமுலில் இருக்கக்கூடும்.

* * *

ஜி. ஓ. நே. 803 எல். ஏ. 22-3-41.

சிவில் கோர்டார் தீர்மானத்திற்கு எதிர்படையாக லோகல் போர்டு அப்பீல் செய்தால், கவர்னமெண்ட் ஒரு கக்ஷியாக இல்லாவிட்டால், ஜில்லாவிலுள்ள கோர்டில் தாக்கல் செய்தால், அஜ்ஜில்லா கவர்னமெண்டு ப்ளீடரின் அபிப்ராயமும், மதராஸில் தாக்கல் செய்யவேண்டுமானால், மதராஸ் கவர்னமெண்ட் ப்ளீடர் அபிப்பிராயத்தை கேட்கவேண்டும். கவர்னமெண்டார்கள் கக்ஷியாக இருந்து அவர்களின் லாபம் லோகல் போர்டிற்கு எதிராக இருந்தால் அப்பீல் தாகல் செய்வதற்கு தக்கின காரணங்களிருக்கின்றனவா என்று விஷயங்களில் இன்னு எந்த பிளீடர்களையாவது கேட்கலாம்.

வக்கீல் கொடுத்த் அபிப்ராயம் பிரகாரத்தைவிட அப்பீல் செய்யலாகாது. இந்த அபிப்ராயத்தற்கு ரூ. 100க்குள் பணம் கொடுக்கலாம். பிரத்தியேக சந்தர்பங்களில் லோகல்போர்டு இன்ஸ்பெக்டார் சாங்ஷன் செய்யக்கூடும். அப்பீல் தாகல் செய்யும் பொழுது ரெகுலேஷன் பணம் அதிகமாயிருந்தால் அம்மொத்தமும், இல்லாவிட்டால் ரூ. 100, அபிப்ராயமும், கேஸ் நடத்தலும், இவ்விரண்டிற்கும் அதிகமாக கூடாது.

* * *

ஜி. ஓ. நே. 988 எல். ஏ. 7-4-41.

ஒரு லோகல் போர்டிலிருந்து மற்றொரு லோகல் போர்டிற்கு மாற்றப்பட்ட உத்தியோகஸ்தனுக்கு, வரவுகளும், லீவு சம்பளங்களையும் சார்ந்த நிபந்தனைகள்.

* * *

ஜி. ஓ. நே. 991 எல். ஏ. 7-4-41.

லோகல் போர்டு ஆக்ட் 160-வது ஸெக்ஷன் கீழ் மித்தம் (வராண்டா) வகையறுவுக்கு கொடுக்கும் லைஸன்ஸுகளின் விஷயத்தில், அதிதினமும் எடுத்து, திரும்பவைக்கக்கூடு வஸ்துவினால் செய்யப்பட்டதாயிருந்தால், வருஷத்திற்கு அதிக மாகாத காலத்திற்கு மொத்தமும் 3 வருஷத்திற்கு மறுபடியும் காரியதரிசிகளே லைஸன்ஸு கொடுக்கக் கூடுமென்று, இது பிரகாரமில்லா விட்டால் கலக்டர் உத்தரவு இல்லாமல் லைஸன்ஸு கொடுக்காது. அதேமாதிரி வீட்டிற்கு முன்பு தால்வாய்மேல் கல்போடும் விஷயத்தில் கலக்டருக்கு அதிகாரமிருக்கிறது.

முனிசிபல் கமிஷ்னரின் செய்கைகள்.

முனிசிபல் கமிஷ்னர்களின் முதல்கூட்டத்தின் திறப்புவிழா தின மன்று, லோகல் போர்டின் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கிரப் அவர்கள் பேசினதை இதில் பிரசுரித்திருக்கிறோம்.

இன்ஸ்பெக்டர், கமிஷ்னர்களிடம், 'முனிசிபாலிடிக்கு உழைப்பதே முக்யம்' என்பதை எடுத்துரைத்ததன்பற்றி எங்களுக்கு சந்தோஷம். எக்ஸிகுயூடிவ் ஆபீஸர்களாக பஞ்சாயத்துக்கும், ஜில்லா பஞ்சாயத்துக்கும், உபபஞ்சாயத்து ஆபீஸ்களுக்கும், பழக்கங்கொடுக்கப்பட்டு வரும் பஞ்சாயத்தார்களும் இன்ஸ்பெக்டர் சொல்லியதை யறிவார்களென்று நம்புகிறோம். அவர் வார்த்தைகளைக்கேட்டு, அதன்படி, எக்ஸிகுயூடிவ் ஆபீஸர்கள் நடப்பார்களென்று நம்புகிறோம்.

Mr. எஸ். ஜி. கிரப் துரை பேசியது.

கோயம்புத்தூரில் சம்பாஷணை காரியதரிசி பேசினது.

ராவ் பகதூர் எஸ். ஜி. கிரப் துரை, சாம்பாஷணைக்கூட்டத்தை திறந்து வைத்த போது, முதன்முறையாக முனிசிபல் கமிஷ்னர்கள் ஆபீஸ் விஷயமாக ஒன்று கூடுவதால் இது நிகரற்றது என்று கூறினர். முனிசிபல் ஆபீஸ் உண்டுபண்ணப்பட்டபொழுது, அநேக ஜனங்களுக்கு அதன் நிலைமையைப்பற்றி சந்தேகமாயிருந்தது. சிலர் முனிசிபல் கமிஷ்னர்கள், கவுன்சிலின் மெஜாரிடி கக்ஷி (கதிர்தாங்கு) யின் கையில் ஒரு பாவையாகவும், சிலர் கவுன்சிலின் நன்மையை எடுத்து விட்டு புத்திமதி சொல்லும் கக்ஷியாய்விடும் என்றும் நினைத்தார்கள். ஆனால் இவர்களின் நினைப்பு தவறாகி விட்டது. இதுவரையிலும் திறந்து வைத்திருந்த இடத்தை ரொப்பி முனிசிபல் பரிபாலனத்திற்கு முக்கியமானவர்கள் என்று நிரூபித்து விட்டார்கள். கமிஷ்னர்களின் அவசியத்தை பற்றி பேசாத சமயத்தில் அவர்கள் ஒரு ஸ்திரத்தை அடைந்தார்கள்.

எல்லா கமிஷ்னர்களின் மீட்டிங்குகளிலும் உத்தியோகஸ்தர்கள் அவர்களின் சந்தேகங்களை வெளிப்படுத்தி, அதிகாரங்களையும் கோறினார்கள். ஆனால் இம்மீட்டிங்கில வாங்குவதை விட கொடுப்பதேமேல் என்ற எண்ணத்துடன் இருக்கிறார்கள். ஆகையினால் இம்மீட்டிங்கின் முதல் இரண்டு தினங்களையும், தங்கள் வசிக்கும் பட்டணத்திற்கு உபயோகமாக என்ன செய்யவேண்டும் என்று பேசுவதற்காக வைத்திருக்கிறோம். தங்களுடைய ஆபீஸ் பரிபாலனத்தை எப்படி நடத்துவது என்றும், பட்டிணங்களின் சிவிஷயூவின் வளர்சிக்கு எப்படி உதவுவது என்றும், பட்டிணங்களை, நல்லதாகவும், சுகாதாரங்களுள்ளவைகளாகவும் எப்படி செய்வது என்றும் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் ஆவலடைந்திருக்கிறார்கள்.

ஒரு கமிஷ்னர், ஒரு பட்டிணத்திற்கு சென்றால் தனக்குள், "இந்தபட்டிணத்திற்கு எந்த உதவி செய்யலாம்? இதை எப்படி சுகாதார முள்ளதாக செய்வது ?"

என்று தனக்குள் கேள்வியை கேட்டுக்கொள்ளவேண்டும். உதவி செய்வதை முக்ய மாக நினைத்த கமிஷ்னருக்கும். ஜனங்களுக்கும் ஒருவித குறையும் இருக்காது. மனுஷ்ய தன்மையில், ஒருவன், "நான் மற்றவனுக்கு என்ன கொடுக்கலாம்" என்ற மனோபீஷ்டத்தை யடையவேண்டும். இப்படிப்பட்ட எண்ணத்தையுடைய கமிஷ்னர், எவ்வளவு சக்தியற்றவனாக இருந்தாலும், பட்டினத்தவர்களுக்கு உபகார மாக இருக்க முடியும். சில கமிஷ்னர்கள் ஒரு பட்டிணத்தை ஆள தங்களை அனுப் பித்திருப்பதாக நினைத்ததன் காரணமாக, அக்கிராசனர், கவுன்சில், பொது ஜனங் கள் ஆகிய இவர்களிடம் சண்டையிட்டுக்கொள்வதையும் நான் கண்டிருக்கிறேன் ஆகையினால், உங்களை, நீங்கள் செல்லும பட்டிணத்திற்கு உங்களாலியன்றவரை கஷ்டப்பட வேண்டும் என்று கோறிக்கொள்கிறேன் (என்றுரைத்தார்).

கமிஷ்னர்களும் அவர்களின் வேலைகளும்.

சரியான ஆபீஸ்தான் சரியான கமிஷ்னருக்கு ஆயுதம் என்று பிரசங்கி (பிர சங்கம் செய்பவர்) சொன்னார். அவர்கள், தங்களிடமிருந்த குமாஸ்தாக்களின் பிர மானத்தினால், தங்கள் ஆபீசை சரியானதாக செய்ய முடியவில்லை என்று சொல்லு வதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் அனுபவத்திலிருந்து அக்குமாஸ்தாக்களே பொருத்தமானவர்கள் என்று கூறுகிறார். அவர்களின் ஆபீஸர்களுக்கு முயற்சி வேண்டியதா யிருந்தால், அவர்கள் முயற்சிப்பார்கள். ஆபீஸர் சோம்பலுடன் அவர்களும் சோம்பித்திரிவார்கள். அவர் இணக்கமாயிருந்தால், அவர்களும் இணக் கமாயிருப்பார்கள். ஆபீஸர் பழுது செய்தால் அவர்களும் பழுது செய்வார்கள். ஆபீஸை சரியானதாக செய்யவேண்டுமானால், கீழிருப்பவர்களைவிட கமிஷ்னரே கஷ்டத்துடன் வேலை செய்துகாட்டவேண்டும்.

தினசரிவேலையைப்பற்றி சொல்லிய பிறகு காரியதரிசி பட்டணத்தை எப்படி முன்னுக்கு கொண்டு வருவது என்பதை சொன்னார்.

"நீங்கள், உங்களுடைய வாழ்கையை உம்முடன் வசிக்கும் ஜனங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்களென்பதை மறக்ககூடாது. நீங்கள் செய்யும் நடத்தை, பேசும் வார்தையாவையும் ஜனங்கள் அறிவார்கள். உமது நடத்தையால் அரசாங்கத்தை ஏமாற்றலாம். உமது வேலையால் பரிசோதகரை (இன்ஸ்பெக்டர்) ஏமாற்றலாம். ஆனால் ஜனங்களை ஏமாற்ற முடியாது.' ஆகையினால், நீங்கள் உண்மை, முயற்சி யுடன் வாழ்வது அவசியம். கெட்ட நடத்தையுள்ளவர்களிடம் சிநேகித்தால் ஜனங் கள் உம்மை மதிக்கமாட்டார்கள். ஆகையினால் கமிஷ்னர்கள், சந்தேகிக்கப்படாமல், லீஸரின் மனைவிபோலிருக்க வேண்டும். அவன் மிகவும நல்லவனாகவும், கடவுளுக்கு பயந்தவனாகவும் இருந்தாலொழிய, அவனுடன் வசிக்கும் ஜனங்களுக்கு உதவி புரிய முடியாது.

சப்பந்தயாலோசனைக்கூட்டம் திறந்தவுடன், கமிஷ்னர்களின் ஆதிக்கங்களையும், வேலைகளையும் பற்றி பேசினார்கள். கவுன்ஸிலும், மற்ற விஷயங்களும் நடந்தது. இவ்விஷயங்களை ப்ரஸ் (பிரசுரிப்பதற்கு) கொடுக்கவில்லை. கூட்டம் இன்னும் மூன்றுதினங்களுக்கு நடக்கும். நாளையதினம், கமிஷ்னர், குப்பைகாரர்களின் வீடுகளையும் ஆஸ்பத்திரிகளையும் கரிகாய்கள் விற்கப்படும் மார்கட்டையும் மேற் பார்வையிடுவார்.

கர்பிணிகளினும், சிசுக்களினும் ரக்ஷணை

இதில் முக்ய பாகங்கள், மதராஸ் மாகாண கோவாபரேடிவ் யூனியன் பிரசுரித்த "கிரும ஆரோக்யமும், விவசாயமும்" என்றதிலிருந்து எடுத்தது.

நம் தேசத்தில் 1000க்கு 180 கர்பிணிகள் இறக்கின்றனர். 185 கர்பிணிகள் குழந்தையை பெற்றால் அவர்களில் ஒருவள் பிரசவ காரணத்தினாலேயே இறக்கின்றாள். உயிருடன் இருப்பவர்கள்கூட நோவினால் வெகுநாள் கஷ்டப்படுகிறார்கள். இவைகளுக்கு காரணங்கள் ஏழ்மைத்தனத்தினால் நல்ல ஆகாரமில்லாததும், 9 மாதம்வரை வேலை செய்வதாலும், கர்ப காலத்தில் டாக்டர்களின் உதவி யில்லாததும், பிரசவ சமயத்தில் நர்சின் உபகாரமில்லாததும், ஆனவை. தாய் எவ்வளவு ஆரோக்யத்துடன், புஷ்டியுடனும் இருக்கிறாளோ பிள்ளை அவ்வளவு ஆரோக்யமாகவும் புஷ்டியாகவும் இருக்கும். ஆகையினால் கர்பிணிகள் நல்ல ஆரோக்யமாயிருக்க வேண்டும். கர்பமானதிலிருந்து நல்ல ஆரோக்யத்துடனிருக்க வேண்டும். மற்றவர்களுக்கு எவ்வளவு கஷ்டமிருந்தபோதிலும், கர்பிணிக்கு நல்ல ஆகாரமும், நல்ல சாந்தியும் நல்ல உத்ஸாகமும் கொடுக்கவேண்டும். அந்த 9 மாதங்களில் அக்கர்பிணிக்கு ஒரு வியாதியும் வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். கர்பிணிக்கு வியாதியிருந்தாலும், வியாதியிருப்பது தோன்றினாலும், உடனே டாக்டரிடம் சென்று, அவர் புத்திமதிகளின் பிரகாரம் நடக்கவேண்டும். அப்படி செய்யாவிட்டால் கர்பகாலத்தில் அவ்வியாதி அதிகமாகிவிடும், அல்லது மாதத்திற்குள் பலவந்தமாக குழந்தையை வெளியிலெடுக்கவும் நேரிடும். நல்ல ஆரோக்யத்துடனும், நல்ல ஆகாரத்துடனும் இருக்கும் கர்பிணிகளுக்கு, கர்ப சமயத்தில் துக்க சமாசாரத்தையாவது, திடீர் அகஸ்மாத்தாக உண்டான சம்பவங்களையாவது கேட்பதால் அபாயங்கள் நேரிடும். ஆகையினால் மேற்கூறியவைகளை கேட்காமல் பார்த்துக்கொண்டும், உத்ஸாகத்தைக் கொடுக்கும் பிரஸங்கங்களுக்கோ, ஆனந்தத்தை கொடுக்கக்கூடிய ஸ்தலங்களுக்கோ, அழைத்து செல்ல வேண்டும்.

கர்பிணிகள் அனுசரிக்க வேண்டியவை.

1. கர்பிணிகளின் ஆகாரம் ஆரோக்யமுள்ளதாயிருக்கவேண்டும். தான் உண்ணும் ஆகாரத்தில் பாதி வயிற்றிலிருக்கும் குழந்தைக்கு செல்வதால், ஆகாரத்தில் அசிரத்தை காட்டலாகாது. கர்பிணி பசியால் வாடினாலும், உண்ண சரியான உணவில்லாவிட்டாலும், உண்ட ஆகாரம் ஜீரணமாகாவிட்டாலும், வயிற்றிலிருக்கும் பிண்டம் புஷ்டியாயிருக்காது; இப்படி யிருந்தாலோ, குழந்தை வயிற்றில் சரியாய் வளராமல் சரியான சமயத்தில் வெளியில வராது. கர்பிணிகளுக்கு முக்யமாக பால் கொடுக்க வேண்டும். பாலில் வைடமின் ஏ. அதிகமாயிருப்பதாலும், குழந்தைக்கு மிகவும் நல்லதாகையாலும், அது முக்யம்.

2. கர்பிணிகள் நிறைய ஜலம் குடிக்கலாகாது.

3. அவளுக்கு சரியாய் கக்கூஸ் விரேசனம் செல்லவேண்டும். சரியாக செல்லாவிட்டால் கர்ப காலத்தில் கஷ்டமாயிருக்கும். விரோசனம் சரியாக செல்லாவிட்டால, அதற்குறிய மருந்துகளையும் விரோசனம் செய்யக்கூடிய கறிகாயையும், கீரையையும் சாப்பிடவேண்டும்.

4. கர்பிணிகள் சரீரத்திற்கு ஆயாசத்தைக் கொடுக்கக்கூடிய காரியங்களை செய்யலாகாது. சுகமான வேலைகளையும் செய்யாமல் சோம்பலாக உட்காரவும்

கூடாது. முதல் சொல்லியதால் ஆயாசமுண்டாகும், இரண்டாவது சொல்லியதால் சோம்பலுண்டாகும். நம் இந்திய மாதர்கள் தினசரி செய்யும் வீட்டு வேலைகள் அவ்வளவு ஆயாசத்தைப்படுத்தாததால் அவைகளைச் செய்யலாம். வீதியில் சென்று கூலிவேலை செய்வதும், தூரமான இடத்திற்கு சென்று ஜலம் கொண்டு வருவதும், செய்யலாகாது. வீட்டு வேலை போதுமென்றும், வீட்டிற்குள் எப்பொழுதுமில்லாமல் சாயந்திரத்தில் காற்று வாங்கினால் திரேகத்திற்கு சவுக்கியம் மாதம் அதிகம் ஆக, ஆக, வீட்டு வேலைகளையும், வெளியில் செல்வதையும் தடுக்க வேண்டும். இரவில் 8 மணி நேரமும், பகலில் ½ மணி நேரமும் தூங்க வேண்டும்.

5. தினமும், உடம்பை அலம்பியோ, ஸ்நானம் செய்தோ, சரீரத்திலுள்ள எல்லா அங்கங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். கட்டிகள், புண்கள் உண்டானாலும், காயங்களுண்டானாலும், உடனே சிகிச்சை செய்துக்கொள்ள வேண்டும்.

6. பல்லை நன்றாக தேய்த்து, வாயை சுத்தமாக வைத்துக்கொள்ளவும். அப்பப்பொழுது பல் வைத்தியனிடம் காட்டிக்கொள்ளவேண்டும்.

7. தினமும் மூத்திரம் சரியாக செல்லாவிடில் வைத்தியரிடம் சிகிச்சை செய்துகொள்ளவேண்டும் கர்பிணிகளின் தேக ஆரோக்கியத்திற்கு சாக்ஷி சரியாக மூத்திரம் செல்வதே. 7 மாதம் வரையிலும், மாதாமாதமும், அதற்குப்பிறகு 15 தினத்திற்குள் ஒருதாமும் மூத்திர பரிக்ஷை செய்யவேண்டும்.

8. ரத்தம் குறைவானாலும், தலை வெலித்தாலும, உடம்பு நோவெடுத்தாலும், கை, கால், முகம், கண், இவைகள் பொங்கியிருந்தாலும், நரம்பு அல்லது அடிவயர் வெலித்தாலும், தூக்கமில்லாமல் கஷ்டப்பட்டாலும், உடனே டாக்டரிடம் சென்று பரீக்ஷை செய்துக் கொள்ளவேண்டும். இப்படி செய்தால் பிரசவ சமயத்தில் ஒருவித கஷ்டமுமில்லாமல் பிரசவிக்கலாம்.

9. 9 மாதத்தில் நோவெடுத்தால், பழகிய நர்சின் உபகாரம் பக்கத்திலேயே இருக்கவேண்டும். அவஸ்யமிருந்தால் பழகிய டாக்டரின் உதவியும் வேண்டும்.

குழந்தை பிறந்த உடன்.

குழந்தை பிறந்த உடனே, தாய் ஒருவாரமாகிலும் படுக்கையில், காற்று அல்லாது வெயலாவது படாமல் இருக்கவேண்டும். நம் தேசத்தில் கர்ப சமயததில் பத்து நாள் கட்டு திட்டத்துடன் வைத்திருப்பதின் காரணம் இதுதான். அதற்கு பிறகு ஒரு மாதம வரையிலும் வீட்டு வேலை செயயலாகாது. அப்படி சாந்தி எடுத்துகொள்ளாவிட்டால் புஷ்டியாக இருக்கமுடியாது. அப்படி ஆயாசமுள்ள காரியத்தை செய்தால் வியாதிகள் வரும். அப்படி சாந்தியடைந்து ஆரோக்யத்துடனிருந்தால் பால் சேர்ந்து குழந்தைக்கு ஆகார முண்டாகும். அப்படி செய்யாமல், வீட்டு வேலைகளைச் செய்தால் பிள்ளைக்கு பாலில்லாமல் செய்து விடும் சாந்தி எடுத்துக்கொண்டும் ஆரோக்யமுள்ள அன்னத்தை யுண்டால் அது பாலாக மாரி குழந்தையை புஷ்டியாக்கும்.

இப்படிப்பட்ட கட்டு திட்டங்களுக்குள் பட்டால், பிரசவமும் சவுக்கியமாக முடியுமே ஒழிய கஷ்டமாக முடியாது. கர்பிணிபாவதும், சுகபிரசவமாவதும் கர்பிணியின் ஆரோக்கியத்தை தெறிவிக்கிறது. கர்பமாகாமலிருப்பதும் சுக பிரசவமில்லாதிருப்பதும் ஆரோக்யமில்லாதிருப்பதை தெறிவிக்கிறது.

மேற் கூறிய தற்காப்புகளை ஏழைகளுடைய பஞ்சாயத்துபோர்டுகளின் கர்தவ்யம். கூட்டுக்கமிட்டிகள் ஏற்பாடாயிருந்தால் இது இன்னும் சீக்ரமாக நடக்கும் இப்பவும் மிஞ்சிவிடவில்லை. தன் ஊறருகிலுள்ள டாக்டர்களையும் பழகிய நர்சிகளையும் சேர்த்து, பணமுள்ளவர்களை ஒன்று கூட்டி, ஆஸ்பத்திரி ஒன்று திறந்து, ஜனங்களுக்கு நன்மை செய்வது பஞ்சாயத்தின் லக்ஷ்யம். மைசூர் சமஸ்தானத்திலுள்ள கிராமங்களில் இம்மாதிரி தர்ம காரியங்கள் நடக்கின்றனவென்று தெரிய வருகின்றது.

மதராஸ் ப்ரோவின்ஷியல் கோஆபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

சைதாபேட்டை பிராஞ்சு :

38, காரிணீஸ்வரர் கோயில் தெருவு, சைதாப்பேட்டை.

பிரசிடெண்டு :

மிஸ்டர் காவலி சீதாராமய்ய பந்துலு

ஸெக்ரடேரி :

டி. ராவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காராக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும்:

செக்ரடரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

வெளியிட்டவர், பிரசாரகர்த்தா, மிஸ்டர். வி. விய்யன்ன, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோஆபரேடிவ் அச்சுக்கூடத்தில்
[illegible] கிருஷ்ணமாச்சாரி, பி.ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.